உதவி அமர்வு நீதிமன்றம், மேலூர்

S.C No.689 /2023

பெயர் : மணிகண்டன் (அ.சா.14)
தகப்பனார் பெயர் :பாஸ்கரன்
கணவர் பெயர் :
வயது :30
கிராமம் :ஆலம்பட்டி
வட்டம் :மேலூர்
தொழில் :லாரி டிரைவர்

சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் விசாரிக்கப்பட்டார்.

12.03.2026

முதல் விசாரணை:

ஆஜர் எதிரிகளை தெரியுமா என்றால் தெரியும். 1ம் எதிரி வடிவேல் எனது ஊர்க்காரர் ஆவார். சுமார் 3 ஆண்டுகளுக்கு முன்னர் மீன்பிடிப்பதற்காக கருங்காலக்குடி சென்று கொண்டிருந்தேன். இடையில் 1ம் எதிரி வடிவேலை பார்த்தேன். அவர் தன் அக்கா இறந்துவிட்டதாகவும், என்னுடைய TVS Apache இருசக்கர வாகனத்தை கேதத்திற்கு செல்லவேண்டுமென்று இரவல் கேட்டார். நான் அவரிடம் TVS Apache பதிவு எண்.TN59BU 2623 வண்டியை ஆஜர் 1ம் எதிரி வடிவேலுவிடம் கொடுத்துவிட்டு நான் மீன்பிடிக்க சென்றுவிட்டேன். மாலை வரும்பொழுது, பிரச்சினை ஏற்பட்டதாக கொட்டாம்பட்டி காவல்நிலையத்தில் இருந்து வண்டி அங்குஇருப்பதாகவும் என்னை வரும்படியும் அழைத்தார்கள். நான் நீதிமன்றத்தின் மூலம் மனு தாக்கல் செய்து எனது இருசக்கர வாகனத்தை திரும்ப பெற்றுகொண்டேன். மேற்படி TVS Apache பதிவு எண்.TN59BU 2623 இருசக்கர வாகனம் என் பெயரில் தான் இருந்தது. தற்போது வரை மேற்படி இருசக்கர வாகனம் என்னிடம் தான் இருக்கிறது. வேறு எதுவும்

எனக்கு தெரியாது. இதுசம்பந்தமாக காவலர்கள் விசாரித்தார்கள் நடந்தவற்றை கூறினேன்.

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

கொட்டாம்பட்டி காவல்நிலையத்தில் விசாரித்த பிறகு காவலர்கள் என்னிடம் கையெழுத்து எதுவும் பெற்றார்களா என்றால் நினைவில்லை. என்ன விசாரணை செய்தார்கள் என்றால் முதல் விசாரணையில் நான் சொல்லிய விபரத்தை நான் காவலர்களிடம் தெரிவித்தேன். கொட்டாம்பட்டி காவல்நிலையத்தில் இருந்து மாலை நேரம் நினைவில்லை. அழைப்பு வந்தது. சம்பவத்தை பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்றும், கொட்டாம்பட்டி காவல்நிலையத்தார் கேட்டு கொண்டதற்கிணங்க நான் கையெழுத்து செய்துவிட்டு பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை : இல்லை.

SAMUNDESWARIPRABHA Digitally signed by SAMUNDESWARIPRABHA Date: 2026.03.12 10:20:02 +0530

Assistant Sessions Judge

Melur